ಸಂಕೇತ ಸಂಖ್ಯೆ : **10-T**

**Code No. : 10-T**

# CCE RR

## ವಿಷಯ : ಪ್ರಥಮ ಭಾಷೆ — ತಮಿಳು

## Subject : First Language — TAMIL

**( ಹೊಸ ಪಠ್ಯಕ್ರಮ / New Syllabus )**

**( ಪುನರಾವರ್ತಿತ ಶಾಲಾ ಅಭ್ಯರ್ಥಿ / Regular Repeater )**

**பொதுவான குறிப்புகள் :**

i) இந்த வினா-விடைத்தாள் தொகுப்பானது புறவய மற்றும் அகவய வகை (Objective and Subjective) வினாக்கள் 50-ஐ கொண்டுள்ளது.

ii) ஒவ்வொரு புறவயவகை (Objective type) வினாவிற்கான விடையை எழுத இடம் தரப்பட்டுள்ளது. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து அந்த விடைக் குறியீட்டு எழுத்துடன் விடையை முழுவதுமாக தரப்பட்டுள்ள இடத்தில் எழுத வேண்டும்.

iii) அகவய வினாக்களின் (Subjective type questions) விடைகளை எழுதுவதற்கென போதுமான இடம் தரப்பட்டுள்ளது. கொடுக்கப்பட்டுள்ள இடத்திற்குள்ளாகவே நீவிர் விடையளிக்கவேண்டும்.

iv) மாணாக்கர்கள் விடைகளை பென்சி ல் எழுதக்கூடாது. பென்சிலால் எழுதப்பட்ட விடைகள் மதிப்பீடு செய்யப்பட மாட்டாது. (வரைபடங்கள், படங்கள் மற்றும் மேப்புகளைத் தவிர)

v) மாற்று வினாக்கள் தரப்பட்டுள்ள வினாக்களில் ஏதேனும் ஒரேயொரு வினாவிற்கு மட்டுமே விடையளிக்க.

vi) புறவய மற்றும் அகவய வினாக்களுக்கு எதிராக தரப்பட்டுள்ள குறிப்புகளை கடைபிடிக்கவும்.

vii) பல்விடை வினாக்கள் (Multiple choice questions), கோடிட்ட இடத்தை நிரப்புதல் மற்றும் பொருத்துக வகை வினாக்களின் விடைகளில் சுரண்டுதல் / திரும்ப எழுதுதல் / குறியிடுதல்கள் அனுமதிக்கப்படாது. இவ்வாறு செய்தால் அவை மதிப்பீடு செய்யப்பட மாட்டாது.

viii) மாணாக்கர்கள் வினாத்தாளை படிப்பதற்கென கூடுதலாக 15 நிமிடங்கள் தரப்பட்டுள்ளது.

ix) வலது பக்க ஓரத்தில் தரப்பட்டுள்ள இடத்தில் எதுவும் எழுத வேண்டாம்.

## பகுதி - ‘அ’

I. ஒரு தொடரில் விடை தருக : 11× 1 = 11

1. தமிழ்மொழி எத்தகையது என்கிறார் பாரதிதாசன் ?
2. யாரைக் கண்டதும் நிலம் என்னும் நல்லாள் நகுவாள் ?
3. சிவபெருமான் எவ்வேடத்தில் உலகம் உய்ய எழுந்தருளினார் ?
4. கொல்லனது கடமை என்ன என்று பொன்முடியார் கூறுகிறார் ?
5. நாயின் இயல்பாகக் கவிஞர் ஆண்டாள் பிரியதர்ஷனி கூறுவது யாது ?
6. இன்றைய பெரிய கவலையாகத் தென்கச்சியார் கூறுவது யாது ?
7. நம் கையில் எவை இல்லை என்கிறார் கவிஞர் வைரமுத்து ?
8. இலங்காவித் தீவுகள் எந்த நாட்டின் ஒரு பகுதி ?
9. பம்பன் எழுதிய நூல்கள் யாவை ?
10. இளையான்குடிமாறர் பெரிய இறைக்கூடையில் எதனைக் கொணர்ந்தார் ?
11. இளம்பெருவழுதி பாகுபாடு செய்த மனிதர்களின் இருவகையினர் யாவர் ?

II. பின்வரும் வினாக்களுக்கு மூன்று அல்லது நான்கு தொடர்களில் விடை தருக :

9 × 2 = 18

12. ‘பிசி’, ‘புதிர்’ ஆகிய சொற்களை விளக்குக.
13. தீப்பெட்டி ஆபீஸில் இருந்து திரும்பிய பஸ்கள் குழந்தைகளை எவ்வாறு வெளியே தள்ளின ?
14. இறந்த காலம் பற்றி வைரமுத்து கூறுவது யாது ?
15. நம் தெய்வீகக் கதைகள் உணர்த்தும் உண்மைகள் யாவை ?
16. பேராசிரியர் சேதுப்பிள்ளையின் உரையாடல் எவ்வாறு இருக்கும் ?

17. தலைவி உணவு சமைக்க மேற்கொண்ட செயல்களைக் கூடலூர் கிழார் எவ்வாறு விளக்குகிறார் ?

18. புதரில் விதைத்த வித்து போன்றவை எவை ?

19. "மாதங்கம்", "பகடு", "கம்பமா" என்ற பாணனின் சொற்களுக்குப் பாடினி கொண்ட பொருள் யாது ?

20. காளைகளுக்குச் சொல்லுவதுபோல் மக்களுக்குப் பட்டுக்கோட்டையார் கூறுவது என்ன ?

III. பின்வரும் வினாக்களுக்கு ஐந்து அல்லது ஆறு தொடர்களில் விடை தருக :

$9 \times 3 = 27$

21. காலம் அறிதல் பற்றி வள்ளுவர் தரும் விளக்கம் யாது ?

22. நிலக்கரி தரும் நன்மைகள் யாவை ?

23. இளைஞன் எப்போது பாறையில் மோதிய பந்தாய் திரும்பி வர நேரும் ?

24. தற்குறிப்பேற்ற அணியை விளக்குக.

இடம் சுட்டிப் பொருள் விளக்குக :

25. "பாவம் கொஞ்ச நேரமாவது அவர்கள் அயர்ந்து தூங்கட்டும்."

26. "சரி... பூமிகோபப்படற அளவுக்கு மனுஷன் பண்ணின தவறுதான் என்ன ?"

27. "இந்த உலகம் அழியாமல் எதனால் இன்னமும் இருந்து வருகிறது."

28. "அறத்தான் வருவதே இன்பம்"

29. "தீதிலா நன்மைத் திருவருள் குன்றே!"

IV. பின்வரும் வினாவுக்கு எட்டு அல்லது பத்து தொடர்களில் விடை தருக: 3 × 4 = 12

30. சேதுப்பிள்ளையவர்கள் 'இவர்கள் கைவண்ணம் இங்கு கண்டோம்' என்னும் தொடரை நினைவூட்டும் நிகழ்ச்சியினை விளக்குக.

*அல்லது*

நாம் இயற்கையின் சமநிலையை எவ்வாறு கெடுக்கிறோம் ?

31. கிராமத்தின் மாலைநேரக் காட்சிகளை கி. ராஜநாராயணன் வழிநின்று விளக்குக.

*அல்லது*

செங்குட்டுவன் கண்ணகிக்குக் கட்டிய கோயிலைக் கண்டு வியந்ததை விவரி.

32. இளையான்குடிமாறர் மனைவி சிவனடியார் வடிவில் வந்த சிவனுக்கு அமுது படைக்க மேற்கொண்ட செயல்களைக் கூறுக.

*அல்லது*

முன்றுறையரையனார் 'பழமொழி' மூலம் விளக்கும் கருத்துக்களைத் தொகுத்து எழுதுக.

V. அடிபிறழாமல் எழுதுக : 1×4 = 4

33. 'இனிமைத் தமிழ் மொழி ..................' என வரும் பாடல்.

*அல்லது*

'பட்டங்கள் ஆள்வதும் ..................' என வரும் பாடல்.

VI. 34. பின்வரும் பகுதியைப் படித்து கொடுத்துள்ள வினாக்களுக்கு விடை தருக :

4×1 = 4

டால்ஸ்டாய் ரஷ்ய அறிஞர். இலக்கியவாதி. இவர் சொத்துக்கள் பொதுவுடைமையாக வேண்டும் என்ற கொள்கையாளர். இவருடைய மனைவி சோபியா. பொதுவுடைமைக் கொள்கைக்கு மாறானவர். டால்ஸ்டாய் பூர்ச்சமரச்

சோலை ஒன்றை உருவாக்கி மகிழ்ந்தவர். மரங்கள் வேலைக்காரர்களுக்காக வெட்டப்படும் போது மனம் உடைந்து வீட்டை விட்டு வெளியேறியவர்.

வினாக்கள்:

i) டால்ஸ்டாய் எப்படிப்பட்டவர் ?

ii) டால்ஸ்டாய் மனைவியின் பெயர் என்ன ?

iii) டால்ஸ்டாய் எதை உருவாக்கினார் ?

iv) டால்ஸ்டாய் வீட்டை விட்டு வெளியேறக் காரணம் என்ன ?

## பகுதி - 'ஆ'

VII. பின்வரும் வினாக்கள் / மற்றும் முழுமை பெறாத கூற்றுகளுக்கு நான்கு மாற்று விடைகள் தரப்பட்டுள்ளன. இவற்றுள் ஒன்றே ஒன்று சரியானது அல்லது பொருத்தமானது. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து அவ்விடையினை அதற்கென தரப்பட்டுள்ள இடத்தில் விடைக் குறியீட்டு எழுத்துடன் முழுவதுமாக எழுத வேண்டும். $10\times 1 = 10$

35. 'செந்தமிழ்' என்பது ..........................................

(A) உம்மைத்தொகை (B) பண்புத்தொகை

(C) உவமைத்தொகை (D) வினைத்தொகை.

36. பிரித்து எழுதுக : பெருந்தகையர்

(A) பெருந்து + அனையர் (B) பெருந்து + தகையர்

(C) பெரு + தகையர் (D) பெருமை + தகையர்.

37. நான்கு சீர்களைக் கொண்ட அடி

(A) குறளடி (B) சிந்தடி

(C) அளவடி (D) நெடிலடி.

38. பகை நாட்டின் பசுக்களைக் கவர்தல்

(A) உழிஞை (B) தும்பை

(C) வெட்சி (D) வஞ்சி.

39. மலையும் மலை சார்ந்த இடமும்

(A) மருதம் (B) குறிஞ்சி

(C) நெய்தல் (D) வாகை.

40. 'வா' என்பது

(A) பெயரெச்சம் (B) உரிச்சொல்

(C) ஏவல் வினை (D) இடைச்சொல்.

41. இன்பம் என்பதன் எதிர்ச்சொல்

(A) பண்பு (B) துன்பம்

(C) கம்பம் (D) அன்பு.

42. ஆ! இது நம் கணவரின் மோதிரமல்லவா!

(A) வினா தொடர் (B) கட்டளை தொடர்

(C) வியப்புத் தொடர் (D) எதிர்மறை தொடர்.

43. 'வ்' உடம்படுமெய் அமைந்த சொல்

(A) ஈறிலை (B) வரையாடு

(C) திருவருள் (D) எரியீட்டி

44. பறவைகள் .............................................. .

(A) பறந்தது (B) பறந்தன

(C) பறந்த (D) பறந்து.

VIII. தொடர்புபடுத்தி எழுதுக: 4 × 1 = 4

45. வெள்ளை அடித்தான் : பண்பாகு பெயர்

வகுப்பு சிரித்தது : ..............................................

46. மூன்று சீர் : சிந்தடி

இரண்டு சீர் : ..............................................

47. வெண்பா : செப்பலோசை

ஆசிரியப்பா : ..............................................

48. மக்கள் மெய்தீண்டல் : உடற்கின்பம்

மற்றவர் சொற்கேட்டல் : ..............................................

**பகுதி - 'இ'**

IX. 49. உன் பள்ளியில் நடைபெற உள்ள ஆசிரியர் தின விழாவிற்கு ஓர் அழைப்பிதழ் செய்க.

*அல்லது*

உன் பகுதியில் பராமரிப்பின்றி இருக்கும் நூலகம் குறித்து நாளிதழ் ஒன்றிற்கு தகுந்த தலைப்புடன் ஒரு செய்தி எழுதுக. 1×5 = 5

X. 50. பின்வரும் தலைப்புகளில் ஏதேனும் ஒன்று குறித்து கட்டுரை வரைக: 1×5 = 5

அ. தூய்மை இந்தியா

ஆ. காட்டுவளமே நாட்டு வளம்

இ. கைபேசியின் நன்மை தீமைகள்.